



சென்னை மேற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை முன்னெடுப்பில் கழகத் துணை பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழு தலைவர், கனிமொழி கருணாநிதி எம்பி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி அரசு மருத்துவமனையில் ஜனவரி 4, 5, 6 அன்றைய தினம் பிறந்த 58 குழந்தைகளுக்கு, தங்க மோதிரமும் புத்தாடைகளையும் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு முன்னிலையில், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு , கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் ஆகியோர் வழங்கினர். உடன் விஜயாதாயன்பன் மருத்துவர் அ.சுபேர்கான், ஏ.சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, வி.பி.பொன்னரசு, வி.என்.ராஜன், இ.இளம்பாரதி, சி.தினகரன், லைனர்.கே.பிரபு, எஸ்.சசிகுமார், அ.தமீம்அன்சாரி, ஏ.பி.வேலு, ஆர்.சசிகுமார், எஸ்.சித்ராசெழியன் வே.சௌந்தர், சி.வாசன், ஜெ.அன்பரசு, ஆ.காமாட்சி, எம்.எஸ்.வசந்த், ச.ரமேஷ், ஆர். ராதாகிருஷ்ணன், டி.ஜெபஸ்டின், க.அசோக், க.மோகன், டி.குப்புசாமி, எம். தேவா, மு.அசோக், ஆர்.பாபு, சி.வடிவேல் முருகன், எம்.நவநீதிராஜ், ஆர்.புவனேஸ்வரன், எ.அரி, எஸ்.மீனா, கே.கற்பகம், ஜெ.மைதிலி, பி. ஜெயலட்சுமி, ஐ.சசிரேகா, செ.மீனாட்சி, வி.சோபிமேரி, எஸ்.மஞ்சு, உ.ஹேமாவதி, எஸ்.சாந்தி, எஸ்.கல்பனா, சு.கற்பகவல்லி, ந.செல்வி, எ. இந்திரா, மற்றும், கழக தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி வடக்கு பகுதி திமுக சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொது கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பகுதிச் செயலாளர் ஜி.நாராயண பிரசாத்ஏற்பாட்டில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் உடன் தலைமைக் கழக பேச்சாளர்கள் பவானி கண்ணன், மா.பூபதி, திராவிட மணி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி ஜெரால்டு மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஶ்ரீதர், வி.குமார், மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், பொன்.விஜயன், பேபிசேகர், நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், ஒ. ஆர்.நாகூர்கனி, வி.தியாகராஜன், பெ.வினோத், ஜி.துர்கா பிரசாத், ஜான்சன் ரொசாரியோ, வீரபாண்டியன், நளினி கோபி, ஹாஜாசெரிப், ராமமூர்த்தி, விஜயகுமார், நரேந்திரன், நா.விஜயகுமார், நவ்சாத், எஸ்.அபீப், ஜம்பூ நரேஷ், வீ.சிங்காரம், கு.சேகர், மகேஸ்வரி, ஜோன்ஸ் , வி.சரத் குமார், லோ. சரவணன், பன்னீர்செல்வம், வி.டி.ரவிக்குமார், ரமேஷ்பாபு, தமிழ்வாணன், பெருமாள், தங்கவேல், பார்த்திபன், என்.பழனி, செந்தில்குமார், பி.ஆனந்த், டாக்டர் ராஜேஷ், பொ.ரமேஷ், குமரேசன், ஆர்.பிரவீன், நிஜலிங்கம், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்

### ஆர்.என்.ரவி ஒரு அக்மார்க் ஆர்.எஸ்.எஸ். தயாரிப்பு!

# ஆளுநர் பொறுப்பில் தொடர அவருக்கு அருகதை இல்லை!


## "தீக்கதிர்" தலையங்கத்தில் திட்டவட்டம்!

சென்னை, ஜன.8-

ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு அக்மார்க் ஆர்.எஸ்.எஸ்.காரர் என்றும் ஆளுநர் பொறுப்பிற்கு தகுதியற்றவர் என்றும் இனி தமிழகத்தில் ஆளுநர் பொறுப்பில் நீடிக்க அருகதையற்றவர் என்று திட்டவட்டமாக "தீக்கதிர்" தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதுவருமாறு:-

2025 ஆம் ஆண்டின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் திங்களன்று துவங்கி யுள்ளது. ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் உரை யுடன் துவங்குவது வழக்கம். வழக்கம் போல ஆளுநர் உரையை படிக்காமல் ஆர்.என். ரவி வெளிநடப்பு செய்திருக்கிறார். தேசிய கீதம் அவ மதிக்கப் பட்டு விட்டதாக பின்னர் ஆளுநர் மாளிகை விளக்கமளித்துள்ளது. அந்த விளக்க அறிக்கையில் கூட சமூக ஊடகத்தில் பதிவிடப் பட்ட பின்பு அவசரமாக நீக்கப்பட்டு சில திருத்தங்களுடன் மீண்டும் பதிவிடப்பட்டுள்ளது.




சட்டப் பேரவைக் கூட்டம் துவங்கும் போது நீராரும் கடலுடுத்த எனத் துவங்கும் தமிழ்த் தாய் வாழ்த்தும் அதன் பின் நம்முடைய நாட்டின் தேசிய கீதமான ஜன கன மன பாடலும் இசைக்கப் படுவது வழக்கம். இது குறித்து ஆளுநர் ஏற்கெனவே விளக்கம் கேட்டிருக்கிறார். தேசிய கீதத்தை முதலில் பாட வேண்டும் என ஆளுநர் கூற, அதற்கு மாநில அரசு தரப்பில் உரிய விளக்கமும் அளிக்கப் பட்டுள்ளது.

ஆனால் மாநில அரசின் சார்பில் தயாரிக்கப்பட்ட கொள்கை விளக்க குறிப்பை வாசிக்காமல் இருப்பதற்கு சாக்குத் தேடிய ஆளுநர், தேசிய கீதத்தை அவமதிப்பதாகக் கூறி அலறியடித்து வெளிநடப்பு செய்திருக்கிறார். இதன் மூலம் தமிழ்த்தாய் வாழ்த்தையும், தேசிய கீதத்தையும் அவர் ஒருசேர அவமதித்திருக்கிறார். ஏற்கெனவே ஒரு முறை தேசியகீதம் இசைக்கப்படுவதற்கு முன்பே ஆர்.என்.ரவி அவசர கதியில் வெளியேறியது இங்கு நினைவு கூரத்தக்கது.

ஆர்.என்.ரவி ஒரு அக்மார்க் ஆர்எஸ்எஸ் தயாரிப்பு. ஆர்எஸ்எஸ் இயக்கம் கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் ஜன கன மன பாடலையே ஏற்பதில்லை. ஆனால் ஏதோ தேசிய கீதத்தின் மீது அளவற்ற பற்று உள்ளவர் போல ஆர்.என்.ரவி காட்டிக் கொள்வது வெறும் நடிப்பே ஆகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டமன் றத்தையும், அதன் மரபுகளையும் மதிக்காதவ ராக ஆளுநர் ரவி செயல்படுகிறார். போட்டி அரசாங்கத்தை நடத்த முயல்கிறார். கடந்த ஆண்டுகளில் ஆளுநர் உரையின் சில பகுதிகளை படிக்க மறுத்தும், சிலவற்றை சேர்த்துப் படித்தும் சர்ச்சையை உருவாக்கினார். பதவிக்காலம் முடிந்தபிற கும், அறிவிப்பின்றி ஆர்.என்.ரவி தமிழ்நாட்டின் ஆளுநராக தொடர ஒன்றிய அரசு வகை செய்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத்தையும், தமிழ் நாட்டையும் ஆளுநர் ஆர்.என்.ரவி அவமதிப்பது இது முதன் முறையல்ல. ஆளுநர் மாளிகையை ஆர்எஸ்எஸ் அலுவலகம் போல மாற்றி அன்றாடம் வம்பு வளர்ப்பதையும், மாநில அரசுக்கு எதி ராக கம்பு சுற்றுவதையும், திருவள்ளுவர், வள்ள லார் போன்ற வரலாற்று ஆளுமைகளுக்கு காவிச் சாயம் பூசுவதையுமே தன்னுடைய அரசியல் சட்டக் கடமைகளாக அவர் கருதுகிறார் போலும். இனியும் ஆளுநர் பொறுப்பில் தொடருவதற்கு ஆர்.என். ரவிக்கு அருகதை இல்லை.

இவ்வாறு "தீக்கதிர்" திட்டவட்டமாக தனது கருத்தை தெரிவித்துள்ளது.

### வே.முருகன் தலைமையில் – பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் முன்னிலையில்

# சைதை கிழக்கு 172 அ வட்டத்தில் மாபெரும் கோலப் போட்டி:

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் 3000 மகளிருக்கு பரிசுகள் வழங்கினார்

சென்னை, ஜன. 8-

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்ட தி.மு.க. சார்பில் மாவட்டப் பிரதிநிதி வே.முருகன் தலைமையில் , பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் முன்னிலையில் தமிழ்ப் புத்தாண்டு - தமிழர் திருநாள் பொங்கல் விழா நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 3000 பேருக்கு பரிசுகள் வழங்கினார்.

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172அ வட்ட திமுக சார்பில் நேற்று முன்தினம் 6.1.2025 அன்று காலை வட்டம் முழுவதும் தெருக்களில் உள்ள பல்வேறு இல்லங்களில் மாபெரும் கோலப் போட்டி மாவட்ட பிரதிநிதி வே.முருகன் தலைமையில் பகுதி செயலாளர் 13வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மகளிர்கள் தங்கள் இல்ல வாயில்களில் வண்ண வண்ண கோலங்கள் போட்டு வைத்தனர்.

காலை 7 மணி அளவில் நடுவர்கள் தெருக்கள் தோறும் நடந்தே வந்து கோலங்களை பார்வையிட்டு, பரிசக்கான கோலங்களை தேர்ந்தெடுத்தனர்.

மாலையில் வேளச்சேரி 100 அடி சாலையில் நடைபெற்ற பரிசளப்பு விழா மாவட்டப் பிரதிநிதி வே.முருகன் தலைமையில் நடைபெற்றது. இதில் பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் முன்னிலை வகித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முதல் பரிசாக வாஷிங் மெஷின், இரண்டாம் பரிசாக கிரைண்டர், மூன்றாம் பரிசா மிக்ஸி போட்டியில் பங்கேற்ற 3000 பெண்களுக்கு ஹாட் பாக்ஸ் ஆகிய பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியல் மாவட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இ. முருகேசன், ச.ராஜேந்திரன், பி.பி. நாகராஜ், தி.வழிவிட்டான், ஜி.குணா, எஸ். உமா, மோ.எழில், சி.எச். பென்சில்லையா, தி.சத்தியேந்திரன், ஜி.டி. தினகரன், தங்கம் செல்வராஜ், பூ. ஜெயவேல், ரவிமூர்த்தி, மு.செல்வம், விஜயலக்ஷ்மி, தங்கராஜ், பா. யோகேஷ், சித்திரை செல்வன், ரஜினி, தங்கமுத்து, ராமகிருஷ்ணன், போயஜ், சுசிலா, வெண்மதி, பேபி, கன்னியப்பன், சீனிவாசன், ராஜேஷ், ராஜேஷ் கண்ணா, நீலமேகம், முத்துகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172அ வட்ட திமுக சார்பில் நேற்று முன்தினம் 6.1.2025 அன்று காலை வட்டம் முழுவதும் மாபெரும் கோலப்போட்டி மாவட்ட பிரதிநிதி வே.முருகன் தலைமையில் பகுதி செயலாளர் 13வது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ் முன்னிலையில் நடைபெற்றது. மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முதல் பரிசாக வாஷிங் மெஷின், இரண்டாம் பரிசாக கிரைண்டர், மூன்றாம் பரிசாக மிக்ஸி போட்டியில் பங்கேற்ற 3000 பெண்களுக்கு சில்வர் ஹாட் பாக்ஸ் ஆகிய பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியல் இ.முருகேசன், ச.ராஜேந்திரன், பி.பி. நாகராஜ், தி.வழிவிட்டான், ஜி.குணா, எஸ்.உமா, மோ.எழில், சி.எச். பென்சில்லையா, தி.சத்தியேந்திரன், ஜி.டி. தினகரன், தங்கம் செல்வராஜ், பூ. ஜெயவேல், ரவிமூர்த்தி, மு.செல்வம், விஜயலக்ஷ்மி, தங்கராஜ், பா.யோகேஷ், சித்திரைசெல்வன், ரஜினி, தங்கமுத்து, ராமகிருஷ்ணன், போயஜ், சுசிலா, வெண்மதி, பேபி, கன்னியப்பன், சீனிவாசன், ராஜேஷ், ராஜேஷ் கண்ணா, நீலமேகம், முத்துகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம் - பொங்கல் பரிசு வழங்கல்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜன.8-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் தமிழர் திருநாளை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா இன்று (8.01.2025 புதன்கிழமை) மாலை 5.00 மணியளவில் படப்பையில் உள்ள தில்லை மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டம் மு.சுப்ரமணி தலைமையில், ஒன்றிய நிர்வாகிகள் வ.நந்தகோபால் இ.மணி வாசுகிமகேஷ் சி.பார்த்தசாரதி வி.அரி மு.ராஜேந்திரன் மா.பரிமேல ழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கழக பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு கலந்துகொண்டு சிறப்புரையாற்றி கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாதரம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சங்கீதாவேலு, பொன். ரமேஷ்கவி, எஸ்.கர்ணன், மலர் விழிதமிழ் அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், ச.பாலகிருஷ்ணன், எஸ். வைரம், ஜி.எ.ராயப்பா, தினேஷ்கந்தசாமி, ம.ரேவதி, என்.எஸ்.இளங்கோ, வி.எஸ். கோதண்டராமன், கே.என்.சி. சத்தியமூர்த்தி, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் ரா.தீபக், மா.சே.பிரகாஷ், க.பா.ஆடலரசு, எல்.சுதாகர், இரா.குமரவேல், செ.பார்த்திபன், ஆர். சையத்ரமிஸ், பொன்.இளையபாரதி, இ.பாலாஜி, மகாலட்சுமிஎட்டியப்பன், மல்லிகா நடராஜன், ஷோபாரகுநாதன், ஜி.இருசப்பன், ஏ.இ.பரசு ராமன், ம.அசோக்குமார், ஏ.இ. பஞ்சாட்சரம், ப.வேல்முருகன், ச.ரஞ்சி த்குமார், இரா.சந்திரசேகர், மூ.குமார், வ.வீரபாண்டியன், ர.தமிழ்தாசன், க.யுவராணி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நிறைவாக ஒன்றிய இளைஞர்அணி அணி அமைப்பாளர் ப.அறிவொளி - ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அ. ஜமீர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் ஒன்றிய கழகத்தில் அடங்கிய கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற மன்ற பிரதிநி திகள், சிறப்பு அழைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தமிழர் திருநாள் பொங்கல் விழா, வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு, சட்டமன்ற தேர்தல் பணிகள், கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு படப்பை ஆ. மனோகரன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.



கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதனின் தாயார் திருமதி பட்டம்மாள் அவர்கள் நேற்று (7.1.2025) இயற்கை எய்தினார். செய்தி அறிந்த கழக அமைப்பு செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி, கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் 12வது மண்டல குழு தலைவர் என். சந்திரன், வட்ட கழக செயலாளர்கள் இ.உலகநாதன், ஜெ. நடராஜன், திருச்சி 65வது வட்டக் கழக செயலாளர் அ.பன்னீர்செல்வம், பகுதி பிரதிநிதி சம்பத், மற்றும் கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள்,அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.




சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 131 (அ) வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் நலத்திட்ட உதவிகளை மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்வில் தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 131 (அ) வட்டக் கழகச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, தலைமைக் கழக பேச்சாளர் சந்தோஷ் ஜெய், சென்னை தென்மேற்கு மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, 132 (அ) வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா மற்றும் 131 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் கலந்துகொண்டனர்.

### கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர்

# வண்ணை அரங்கநாதன் தாயார் திருமதி பட்டம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜன.8-

கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் - தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன் தாயார் திருமதி பட்டம்மாள் (வயது-96) அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்து கிறோம்.

மறைந்த பட்டம்மாள் அவர்களின் இறுதி ஊர்வலம் சென்னை பழவந்தாங்கல் அவரது இல்லத்தில் (சென்னை நங்கநல்லூர், பக்தவச்சலம் நகர் 15வது தெரு) இருந்து நேற்று புறப்பட்டு, பழவந் தாங்கலில் உள்ள ஈடு காட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி. இராசரத்தினம்

**சனவரி 8 (1993)**



செங்கற்பட்டு மாவட்டக் கழக அவைத் தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பூவிருந்தவல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக நான்குமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.

பூவிருந்தவல்லி ஒன்றிய பெருந்தலைவர், பூவிருந்தவல்லி பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர்.

விலைவாசி உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி ஓராண்டு சிறை தண்டனை அனுபவித்தவர்.

"தோடிக்கு ஒரு இராசரத்தினம், தொகுதிக்கு ஒரு இராசரத்தினம்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**